**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலன் – 2023–2024–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை – புதிய அறிவிப்பு – கிறித்தவர் மற்றும் இஸ்லாமியர் அடக்கம் செய்யும் இடமான கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு புதிதாக சுற்றுச்சுவர், பாதை அமைத்தல் மற்றும் புனரமைத்தல் – செயற்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணைகள்– வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிநஆபி1) த்துறை**

அரசாணை (நிலை) எண்.40

நாள் 09.06.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
வைகாசித் திங்கள் 26–ஆம் நாள்

படிக்க:

சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடித எண்.பி1/1409/2023, நாள் 24.04.2023.

*****

**ஆணை** :–

2023–24–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

> "தமிழகத்தில் உள்ள கிறித்தவர் மற்றும் இஸ்லாமியர் அடக்கம் செய்யும் இடமான கல்லறைத்தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு 1 கோடி ரூபாய் செலவில் புதிதாக சுற்றுச்சுவர், பாதை மற்றும் புனரமைப்பு செய்யப்படும்."

2. தமிழகத்தில் உள்ள கிறித்தவ மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தினர் இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடமான கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களில் உள்ள பழுதடைந்த சுற்றுச் சுவர்களை சீரமைக்கவும் மற்றும் பாதைகளை புனரமைக்கவும் கோரி பல்வேறு கோரிக்கைகள் மூலம் வலியுறுத்தி வருகின்றனர் என்றும், புதியதாக அரசு புறம்போக்கு நிலங்களில் அமைக்கப்படும் கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தங்களுக்கு புதிய சுற்றுச்சுவர் அமைத்து தருமாறும் கோரிக்கைகள் வரப்பெறுகின்றன என்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். அத்துடன், இத்திட்டத்தினைச் செயற்படுத்த ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கோரியுள்ளார்.

3. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து, 2023-2024-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், தமிழகத்தில் உள்ள கிறித்தவர் மற்றும் இஸ்லாமியர் அடக்கம் செய்யும் இடமான கல்லறைத்தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு புதிதாக சுற்றுச்சுவர், பாதை அமைத்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தை செயற்படுத்த நிருவாக ஒப்புதலும், அதற்கென ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 04 – சிறுபான்மையினர் நலன் – 800 – ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AE – பாதைகளையும் இடுகாடுகளையும் ஏற்படுத்தும் திட்டம் – 317 – சிறு பணிகள் – 01 – சிறு பணிகள்.

(IFHRMS த.தொ.கு.: 2225 – 04 – 800 – AE – 31701)"

5. மேலே பத்தி 4-இல் காணும் புதிய கணக்குத் தலைப்பிற்கு சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று செலவினத்தை மேற்கொள்ள சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு சுற்றுச்சுவர், பாதை அமைத்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையில் கீழ்க்காணும் அதிகாரிகளை கொண்ட குழுவினை அமைத்து அரசு ஆணையிடுகிறது:-

a. சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்/ மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்;
b. சம்பந்தப்பட்ட தொகுதி மேம்பாட்டு அலுவலக பொறியாளர்/ பேரூராட்சி/ நகராட்சி / மாநகராட்சி பொறியாளர்;
c. சம்பந்தப்பட்ட வட்டத்தின் வட்டாட்சியர்.

7. மேலும், மேற்காணும் குழுவின் ஆய்வு அறிக்கை, திட்டமதிப்பீடு ஆகியவற்றுடன் அடங்கிய கல்லறை தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு புதிதாக சுற்றுச்சுவர், பாதை அமைக்க மற்றும் புனரமைப்பு செய்ய மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் நிதி ஒதுக்கீடு கோரி வரப்பெறும் கருத்துருக்களை தொகுத்து சிறுபான்மையினர் நல இயக்குநர் அளவில் பரிசீலனை செய்து

தொகை ஒப்பளிப்பு செய்ய சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு, பொது–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாக கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A" யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு – செலவு, பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்தினை 2023–2024–ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவை நிதி (பி, மிபி (ம) சிந / வ.செ.பொது.I) துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.21254/நிதி(பி,மிபி(ம)சிந)/2023, நாள் 09.06.2023–இல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.0231 (இருநூற்று முப்பத்து ஒன்று) (IFHRMS ASL No.2023060231)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மங்கத் ராம் சர்மா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன்,
சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்கள்,
சென்னை, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
மாநில கணக்காயர், சென்னை–18.

நகல்:
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்
தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதி (பி, மிபி (ம)சிந/வ.செ.பொ.I/வ.செ.பொ.II/வ.வ.I)துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின்
முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

9/6/23
பிரிவு அலுவலர்